பழநி, போடியில் நாளை மின்தடை

■ பழநி

பழநி மற்றும் மேல்கரைப்பட்டி துணை மின் நிலையத்தில் நாளை (பிப்.1) பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளன.

இதனால் காலை 9 முதல் பிற்பகல் 2 மணி வரை பழநி நகர், சிவகிரிப்பட்டி, கலிக்கநாயக்கன்பட்டி, புளியம்பட்டி, கோதைமங்கலம், தும்பலப்பட்டி, பாறைப்பட்டி, கே.ஜி.வலசு, பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி, ஆயக்குடி, சின்னக்கலையம்புத்தூர், கொழுமன்கொண்டான், ஆண்டி நாயக்கன்வலசு, கல்துறை, நால்ரோடு, மேல்கரைப்பட்டி, சந்தன்செட்டிவலசு, சங்கம்பாளையம், பெரிச்சிபாளையம் ஆகிய பகுதிகளில் மின்தடை ஏற்படும்.

போடி

போடி துணை மின் நிலையத்தில் நாளை (பிப். 1) பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால் காலை 10 முதல் மாலை 4 மணி வரை போடி, அணைக்கரைப்பட்டி, குரங்கணி உள்ளிட்ட பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என்று தேனி செயற்பொறியாளர் பொ.பிரகலாதன் தெரிவித்துள்ளார்.

77-வது நினைவு தினத்தையொட்டி

அருங்காட்சியகத்திலுள்ள காந்தி சிலைக்கு மரியாதை

■ மதுரை

77-வது நினைவு தினத்தையொட்டி, மதுரை காந்தி அருங்காட்சியகத்திலுள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மகாத்மா காந்தியின் 77-வது நினைவு தினத்தையொட்டி, அருங்காட்சியகத்திலுள்ள சிலைக்கு அருங்காட்சியக துணைத் தலைவர் என்.எம். ஆர்.கே.ஜவஹர்பாபு மாலை அணிவித்து, தேசியக்கொடி ஏற்றினார். ஆட்சியர் சங்கீதா, போக்குவரத்து காவல் துணை ஆணையர் வனிதா, அருங்காட்சியக பொருளாளர் வழக்கறிஞர் மா.செந்தில்குமார் உள்ளிட்டோர் காந்தி அஸ்திபீடத்தில் மலர் அஞ்சலி செலுத்தினார்.

முன்னதாக மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் சாமிநாதன் மது, போதை தவிர்ப்பு ஊர்வலத்தை தமுக்கத்தில் தொடங்கி வைத்தார். அருங்காட்சியக செயலாளர் கே.ஆர்.நந்தாராவ் தலைமை வகித்தார். காந்தி அருங்காட்சியகத்தில் ஊர்வலம் நிறைவு பெற்றது. ஊர்வலத்தில் மதுரை வடக்கு கோட்ட கலால் அலுவலர் எம்.ஆனந்தி, ஜெயின் சிறப்பு பள்ளியின் அறங்காவலர் வெ.கணேசன், முதல்வர் ஜெ.ஆரியமாலா, மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், அருங்காட்சியகப் பணியாளர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

மாலையில் நடந்த சிறப்பு பல் சமய பிரார்த்தனையில் அருங்காட்சியக செயற்குழு உறுப்பினர் ந.ராமலிங்கம் காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர் செ.ரவிசங்கர், புனித ஜஸ்டின் கல்வியியல் கல்லூரி முதல்வர் சகோதரி எஸ்.மார்த்தாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

● காந்தி அருங்காட்சியகத்திலுள்ள காந்தி அஸ்தி பீடத்தில் ஆட்சியர், துணை காவல் ஆணையர் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

தொழுநோய் ஒழிப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

■ ஆண்டிபட்டி

தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தேசிய தொழுநோய் ஒழிப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

கண்காணிப்பாளர் விஜய் ஆனந்த் தலைமை வகித்தார். நிலைய மருத்துவ அலுவலர் சிவக்குமரன், உதவி நிலைய மருத்துவ அலுவலர் மணிமொழி, தோல் நோய் பிரிவு துறைத் தலைவர் உமா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மருத்துவ மற்றும் செவிலியர் கல்லூரி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு வாசகங்களை ஏந்தியபடி பேரணியில் கலந்து கொண்டனர். தொழுநோயாளிகளுக்கு ஊன்றுகோல், காலணி, கண்ணாடி, மருத்துவப் பொருட்கள், போர்வைகள் வழங்கப்பட்டன. உதவி பேராசிரியர் அமுதா, தொழுநோய் திட்ட துணை இயக்குநர் அலுவலக நலக் கல்வியாளர் தர்மேந்திர கண்ணா, சுகாதார ஆய்வாளர்கள் ராமச்சந்திர பூபதி, சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பொது அறிவிப்பு

மதுரை 625 001. டவுன்ஹால் ரோடு, துளுக்கர் சந்து, கதவு 1 நம்பர் வீட்டில் வசித்துவந்து தற்போது சென்னை 600 042. வேளச்சேரி. சாந்தி 1-வது குறுக்குத்தெரு, கதவு 8/23A நம்பர் வீட்டில் வசித்துவரும், தெய்வத்திரு.துரைராஜ் அவர்களின் குமாரர் திரு.D.சங்கர்குமார் அவர்களின் சார்பாக அறிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்காரரின் பாட்டியான கோசலையம்மாள் அவர்கள் மதுரை டவுன் சர்வே வார்டு 5. T.S. No.509/6-ல் கட்டுப்பட்ட கீழ்பாக மனைவீட்டை மலை பேச்சியம்மாள் அவர்களிடமிருந்து மதுரை வடக்கு 1 நீர் இணைசார்பதிவாளர் அலுவலகத்தில் 1691/1970 ஆவணப்படியும், மற்றும் என் கட்சிக்காரரின் தகப்பனார் துரைராஜ் அவர்கள் மதுரை டவுன் சர்வே வார்டு 5. T.S. No.509/6-ல் கட்டுப்பட்ட மேல்பாக மனைவீட்டை கந்தசாமி கோனார் அவர்களிடமிருந்து மதுரை வடக்கு 1 நீர் இணைசார்பதிவாளர் அலுவலகத்தில் 1690/1970 ஆவணப்படியும். கிரையம் பெற்று மேற்படியார்கள் தங்கள் கைவசம் வைத்து அனுபவித்துவந்தனர். அப்பால், மேற்படி அசல் ஆவணங்களான 1691/1970 மற்றும் 1690/1970 ஐ கரையான் அரித்துவிட்டது என்றும் அதனால் மேற்படி சொத்துக்களுக்கு அசல் ஆவணம் இல்லாமல் போய்விட்டது என்பதை இந்த பொது அறிவிப்பு மூலமாக எனது கட்சிக்காரரின் சார்பாக தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

S.கணேசன், B.Com., B.L.,
அட்வகேட்/ கமிஷனர் ஆப் ஓத்ஸ்
செல்: 93441 07351

160, பேலஸ் ரோடு, மதுரை-1.
நாள்: 31.01.2025 இடம்: மதுரை

முல்லை பெரியாறு அணை பலமாக உள்ளது என்ற

உச்ச நீதிமன்ற கருத்துக்கு எதிராக கேரளாவில் நாளை போராட்டம்

என்.கணேஷ்ராஜ்

■ குமுளி

பெரியாறு அணை பலமாக உள்ளது என்ற உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை கேரள மாநிலம் குமுளியில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற உள்ளது.

முல்லை பெரியாறு அணை குறித்த பிரதான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் கேரளாவில் உள்ள பல்வேறு அமைப்பினர் அணையின் பலம் குறித்த சர்ச்சை மனுக்களை அடிக்கடி தாக்கல் செய்து வருகின்றனர். கடந்த 28-ம் தேதி இந்த மனுக்கள் மீதான விசாரணையில் நீதிபதி ரிஷிகேஷ் ராய் கூறுகையில், அணை கட்டி 130 ஆண்டுகளுக்கு மேலாகியும் பலமாகவே உள்ளது. அணை உடையும் என்பது கற்பனை கதைபோலவே உள்ளது என்று கருத்து தெரிவித்து இருந்தார். இதற்கு தமிழக விவசாயிகள் ஆதரவு தெரிவித்து வரவேற்றனர். இந்நிலையில் இடுக்கி எம்பி டீன்குரியாகோஸ் தனது பேட்டியில், நீதிபதியின் கூற்று கேரளத்தின் பாதுகாப்பை கருத்தில் கொண்டும், அணையை ஆய்வு நடத்தி கூறியதும் அல்ல. நீதிபதியின் இந்த கருத்து ஏற்புடையதல்ல. நீதிமன்றத்தின் இந்த நடவடிக்கை தமிழகத்துக்கு சாதகமாக உள்ளது என்றார். இந்நிலையில் நீதிபதியின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை (ஞாயிறு) குமுளியில் கேரள ஜனநாயக உரிமை பாதுகாப்பு குழு சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தமிழக விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கேரள எல்லை குமுளி அல்ல. வண்டிப்பெரியாறில்தான் அவர்கள் போராட வேண்டும். காவல்துறை இதற்கு அனுமதி அளித்தால் நாங்களும் நீதிமன்றத்துக்கு ஆதரவு தெரிவித்து குமுளியின் தமிழக எல்லைப் பகுதியில் உண்ணாவிரதம் இருப்போம், என்றனர்.

ரயில் மோதி அடையாளம் தெரியாத நபர் உயிரிழப்பு

■ பழநி

பழநி அடுத்த சிவகிரிபட்டியில் உள்ள ரயில் தண்டவாளத்தில் நேற்று முன்தினம் (ஜன.29) இரவு திருச்செந்தூர்-பாலக்காடு ரயில் சென்றபோது, தண்டவாளத்தை கடக்க முயன்ற 50 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் மீது ரயில் மோதியது.

இதில், அந்த நபர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இறந்தவர் யார், எந்த ஊர் என்ற விவரம் தெரிவியவில்லை.

பழநி இருப்பு பாதை காவல் சார்பு ஆய்வாளர் பொன்னுச்சாமி தலைமையில், போலீஸார் உடலை கைப்பற்றி பழநி அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இறந்தவர் யார் என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெண்ணிடம் ரூ.30 ஆயிரம் லஞ்சம் வாங்கிய சார்பு ஆய்வாளர் கைது

■ மதுரை

மதுரை ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்தவர் சண்முகநாதன் (35). இக்காவல் நிலையத்தில் கவிதா என்பவர் சமீபத்தில் கொடுத்த புகாரின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் நடவடிக்கை எடுக்க சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் ரூ. 70 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். இதற்கு ரூ.30 ஆயிரம் தருவதாக கவிதா கூறினார். இருப்பினும், லஞ்சம் கொடுக்க விரும்பாத கவிதா, மதுரை லஞ்ச ஒழிப்பு போலீஸில் புகார் அளித்தார். லஞ்ச ஒழிப்பு போலீஸாரின் ஆலோசனைப்படி நேற்று மாலை மதுரை புதூர் பேருந்து நிலையத்தில் வைத்து ரூ. 30 ஆயிரத்தை சார்பு ஆய்வாளரிடம் கவிதா கொடுத்தார். அப்போது, மறைந்து இருந்த லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி சத்யசீலன் தலைமையிலான ஆய்வாளர்கள் குமரகுரு, ரமேஷ் பிரபு, பாரதி பிரியா, சூரியகலா உள்ளிட்டோர் கையும், களவுமாக பிடித்து சார்பு ஆய் வாளரைக் கைது செய்தனர்.

கைதான சார்பு ஆய்வாளர் சண்முகநாதன். 2 ஆண்டுகளுக்கு முன்பு சிறந்த பணிக்காக மாவட்ட நிர்வாகம் மூலம் விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

● சண்முகநாதன்

நகரில் நடப்பவை

மதுரை

- தேசிய கருத்தரங்கம்: 2-ம் நாள், இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம், விவேகானந்த கல்லூரி, காலை 11.30.
- தை தெப்பத் திருவிழா கொடியேற்றம்: மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், காலை 10.
- தை தெப்பத் திருவிழா: 3-ம் நாள், சுப்பிரமணிய சுவாமி கோயில், திருப்பரங்குன்றம், தங்கச்சப்பரம், காலை 9, சுவாமி புறப்பாடு, இரவு 7.
- சர்வ சமய அமைதி பிரார்த்தனை: செப்சிரா, சேவாலயம் மாணவர் இல்லம், செனாய் நகர், மாலை 6.
- ஆன்மிக இலக்கியப் பொழிவு: பேசுபவர்- பெரியகருப்பன், மதுரைத் திருவள்ளுவர் கழகம், வடக்காடி வீதி, இரவு 7.
- நாடக அரங்கேற்றம்: தமிழ்த் துறை, மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, கயல் அரங்கம், காலை 10.30.
- பட்டமளிப்பு விழா: சுகம் செவிலியர் பயிற்சி, தானம் அறக்கட்டளை, மகபூப்பாளையம், காலை 11.30.

sankaranarayanan.s@kslmedia.com

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

Name change

I Rameshkumar Choudhary, son of Bhuraram Choudhary, Hindu, born on 25th November 1981 (native District: Madurai) residing at Door No. 8/6 3rd Floor, Nayakkamar 1st Street, Vaduga Kaval Kooda Street, Madurai 625001 Tamilnadu shall henceforth be known as B.Rameshkumar.

Rameshkumar Choudhary
Place:Madurai
Date:30.01.2025

பொது

பொது அறிவிப்பு

பொது அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கொத்தமங்கலம், இளந்தவயல், கதவு எண்.251 என்ற முகவரியில் வசித்து தற்போது சென்னை, திருவண்ணாவி மாவட்டம், அம்பத்தூர், பிரியாங்கம், பிள்ளையார்கோயில் தெரு, கதவு எண்.3/4ல் வசித்துவரும் எனது மகனைக்கொலுத்து அவர்கள் மகன் ம.சீதாராமன் அவர்கள் (கைபேசி எண்.95660 72147) கொடுத்த தகவலின்பேரில் கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால்,

எனது கட்சிக்காரருக்குச் சொந்த மானதும், அனாது பெயரிலும் அனுபவத்திலும் இருந்து வரும் சொத்தின் இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அசல் கடந்த 09.01.2022ம் தேதியில் காரைக்குடி 1-ம் நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1921/2022 ஆகப் பதிவு செய்யப்பட்ட மேற்படி இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கொத்தமங்கலம் பகுதியில் உள்ள ஜெராக்ஸ் கடை அருகில் 20.01.2025-ம் தேதியில் தவறு விட்டுவிட்டார். மேற்படி பத்திரத்தை மாறாகவோ கண்டெடுத்தால் மேலே கண்ட முகவரிக்கும் தொலைபேசி எண்ணிற்கும் தொடர்பு கொண்டால் கொடுத்துக்கொள்கிறோம். மேற்படி அசல் இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை வைத்து ஏதாவது எட்டத்திற்குப் புறம்பாக மாறினால் செயல்பட்டால் அது எனது கட்சிக்காரரைக் கட்டுப்படுத்தாது.

SF சாமுவேலின் B.Sc., B.L., வழக்கறிஞர், காரைக்குடி.

போக்சோ வழக்கில் தொழிலாளிகளுக்கு சிறை திண்டுக்கல் நீதிமன்றம் தீர்ப்பு

■ திண்டுக்கல்

பழநி அருகே பெத்தநாயக்கன்பட்டியை சேர்ந்தவர்கள் சுந்தரம்(55), தேவா(21). கூலித் தொழிலாளிகள். இருவரும் 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து, அதை செல்போனில் பதிவு செய்துள்ளனர். இதுகுறித்த புகாரின் பேரில் சுந்தரம், தேவா ஆகியோர் மீது பழநி அனைத்து மகளிர் போலீஸார் போக்சோ வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர்.

இந்த வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. சுந்தரத்துக்கு ஆயுள் தண்டனை, ஒரு லட்சத்து ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தும், தேவாவுக்கு 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தும் நீதிபதி வேல்முருகன் தீர்ப்பளித்தார்.

தமிழ்நாடு அரசு
பொதுப்பணித்துறை
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்.

மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு - மொத்த தொகை ஒப்பந்த முறை

மின்னணு-ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.30/2024-25 / க.பொ/க (க&ப) வட்டம் / சேலம் / நாள்: 29.01.2025

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்-7 அவர்களால் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை "https://tntenders.gov.in" என்ற இணையதளத்தில் 10.02.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 25.02.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 25.02.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 25.02.2025-ல் பிற்பகல் 3.30 மணிக்கு இணையவழி மூலம் "https://tntenders.gov.in" திறக்கப்படும்.

வ. எண்.	வேலையின் பெயர்	தோராய மதிப்பீட்டுத் தொகை (ஏரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்)	முன்வைப்புத் தொகை (ரூ.)	பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம்
1.	சேலம் மாவட்டம் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் தாய் சேய் நல பிரிவிற்கான கட்டடம் கட்டும் பணி.	422.60	2,25,000	270 நாட்கள்

ஒப்பந்ததாரர் வகுப்பு : பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு-III ல் மாநில அளவில் / இவ்வட்டஅளவில் ரூ.2.00 கோடி முதல் ரூ.5.00 கோடி வரை மற்றும் அதற்கு மேல்.
முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் : முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம்.
பணியின் பெயர், முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகள் அரசு இணையதளத்தில் "https://tntenders.gov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வலைத்தளம் "https://tntenders.gov.in"-ல் பதிவேற்றம் செய்யப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) வட்டம், சேலம் - 7.

செ.ம.தொ.இ./358/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
மண்டல அலுவலகம், திருவள்ளூர் மண்டலம்,
நெ.46, வள்ளலார் தெரு, பெரியகுப்பம், திருவள்ளூர் - 602 001
தொ.பே.எண்.044-27664017 மின்னஞ்சல் : tncsctlr@tn.nic.in

ந.க. எண் டி1/0148/2025 **இ- ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு** நாள்: 30.01.2025

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிர்வாக இயக்குநருக்காக மண்டல மேலாளரால் திருவள்ளூர் மண்டல கிடங்குகளில் உள்ள காலி சாக்குகளை விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

இணைய வழியாக இ-ஒப்பந்தபுள்ளி வாயிலாக
https://tntenders.gov.in/nicgep/app-ல் 31.01.2025 காலை 11.00 மணி முதல் 19.02.2025 வரை பதிவிறக்கம் செய்து ஆவணங்களை பார்வையிட்டு பதிவேற்றம் செய்யலாம். மேலும் ஏலதாரர்கள் வகுப்பு- III ன்படி மின்னணு கையொப்ப சான்றிதழுடன் (DSC) இணைய தள ஏலத்தில் பங்கேற்க வேண்டும்.
ஒப்பந்த புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் / நேரம் : 19.02.2025 முற்பகல் 11.00 மணி
ஒப்பந்த புள்ளி திறக்கப்படும் நாள் / நேரம் : 20.02.2025 முற்பகல் 11.30 மணி

செ.ம.தொ.இ./ 392 /ஒப்பந்தப்புள்ளி/2025 மண்டல மேலாளர்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் : எண்.10, கிருஷ்ணா புரம் காலனி பிரதான சாலை, மகாத்மா காந்தி நகர், மதுரை - 625014.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" எனும் அடிப்படையில் மின் ஏலத்தின் (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	29.01.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	31699430000803 & 31699420000661	1) திரு. பாலன் A, த/பெ. ஆறுமுகம், 2) திரு. விஜய் B, த/பெ. பாலன் A, 3) திருமதி. கீதா B, க/பெ. பாலன் A	06.01.2024	10.01.2025	ரூ.41,43,921.70 (ரூபாய் நாற்பத்தி ஒரு இலட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஒன்று மற்றும் பைசா எழுபது மட்டும்)	18.02.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.33,65,400/- (ரூபாய் முப்பத்தி மூன்று இலட்சத்து அறுபத்தி ஐந்தாயிரத்து நானூறு மட்டும்)	ரூ.3,36,600/- (ரூபாய் மூன்று இலட்சத்து முப்பத்தி ஆறாயிரத்து அறுநூறு மட்டும்)	04.03.2025 @ 03.00 PM	03.03.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.10, கிருஷ்ணா புரம் காலனி பிரதான சாலை, மகாத்மா காந்தி நகர், மதுரை - 625014.

பாதுகாப்பு சொத்துக்கள் விவரங்கள் : திண்டுக்கல் பதிவு மாவட்டம், நாகல்நாயக்கன்பட்டி சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, பாலகிருஷ்ணாபுரம் கிராமம், மனை எண்.8-ன் மேற்கு பகுதி, பழைய ச.எண். 663/5ஏ, புதிய ச.எண். 663/86-க்குட்பட்டது, அளவுகள் கிழக்கு மேற்கு 20 அடி இருபக்கமும், வடக்கு தெற்கு 66.25 அடி மேற்கு பக்கம், 66. 1/2 அடி கிழக்கு பக்கம், அனைத்து அளவுகள் 1327 சதுர அடி. எல்லைகள்: மேற்கு : வி. பாலகிருஷ்ணன் அவர்களின் சொத்து, கிழக்கு : மனை எண்.8-ன் கிழக்கு பகுதி, வடக்கு : 20 அடி அகல கிழக்கு மேற்கு பொது சாலை, தெற்கு : ச.எண். 663/5 பகுதியின் சொத்து.

மின் ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு" என்ற அடிப்படையில் "ஆன்லைனில்" நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் M/s. 4 Closure இணையதளம் https://bankauctions.in & www.foreclosureindia.com மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு M/s. 4 Closure, தொடர்பு திரு.M. தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in. மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் விளக்கங்களுக்கு ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சவீல் P (மொபைல் எண். 9884474084), திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849), திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653), தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ளர் விலைக்குறிப்பிட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 31.01.2025, இடம் : திண்டுக்கல் Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரகாம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

பொது அறிவிப்பு

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம் - முதல் தளம், கீழ் வெளி வீதி, மதுரை-625001.

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துகளுக்கானது) பிரிவு 13(4)

கீழே கையொப்பமிட்டுள்ள **கனரா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால், **2002**ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் (Act 54 of 2002) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்சொன்ன சட்டத்தின் 13 (12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதி 3க்கு ஏற்பவும், கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் **1) M/s. ஸ